# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | அய்யனார் | Caste: | |
| Father's Name: | அரியமுத்து | Calling: | கூலிவேலை |
| Village: | பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 30 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.07.2025

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். நான் B.Sc., படித்துள்ளேன். சாட்சிகள் மதுரைவீரன், முனியசாமி, சாவித்திரி, சுகுனாபாரதி, மாரிமுத்து, செந்தூர்பாண்டி, பாலமுருகன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். நானும் மேற்படி சாட்சிகளும் என்ன சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் இந்து பறையர். எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் என்ன சாதியை சேர்ந்தவர்கள் என்றால் ஒரு சில நபர்கள் இந்து அகமுடையர் மற்ற நபர்கள் இந்து மறவர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் எழுதியதும் சாட்சியுமான என்று உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது. அதை எங்கு வைத்து போட்டேன் என்றால் பரமக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து போட்டேன். அந்த புகார் மனுவை எழுதியது நான்தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. கடந்த

17.09.2017 ம் தேதி மாலை 4.00 மணியளவில் பார்த்திபனூர் புதுத்தெருவில் உள்ள உச்சிகாளியம்மன் கோவில் அருகே சில நபர்களால் மதுரைவீரனும் அவரது மகனும் தாக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். அந்த நபர்கள் யார் என தெரியுமா என்றால் தெரியும். அந்த நபர்கள் சரவணன், முத்துப்பாண்டி, அஜித், வினோத், பாலகிருஷ்ணன், பாலகிருஷ்ணன் மனைவி லதா , சரவணன் அம்மா மாரீஸ்வரி, சங்கர் மனைவி மகேஷ்வரி. நான் மதுரைவீரனும் அவரது மகனும் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனையில் உள்ளார்கள் என்பதை கேள்விப்பட்டு நான் அங்கு சென்றேன். அப்போது பார்த்திபனூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் மதுரைவீரனையும், அவரது மகன் முனியசாமியையும் விசாரிக்க வந்திருந்தார். அப்போது மதுரைவீரனுக்கும் முனியசாமிக்கும் படிப்பறிவு என்பதால் புகாரை எழுத சொன்னார்கள். மதுரைவீரனும், முனியசாமியும் சொல்ல சொல்ல நான் புகாரை எழுதினேன். நான் எழுதியதை அவர்கள் இருவருக்கும் படித்துக்காட்டி மதுரைவீரனிடம் கையெழுத்து பெற்று நானும் கையெழுத்து போட்டேன். மறுநாள் டிஎஸ்பி என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார். மதுரை வீரன் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை, இறந்துவிட்டார்.

5,6 <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

மதுரைவீரன் எனக்கு பெரியப்பா முறை என்றால் சரிதான். புகாரில் மாலை என்பது இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு எழுத ஆரம்பித்தேன் என்றால் இரவு 8.30 மணிக்கு மேல் இருக்கும். எழுதி முடித்து சார்பு ஆய்வாளரிடம் கொடுக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 9.00 மணி இருக்கும். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது

என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் பெயிண்டிங் வேலை செய்துகொண்டிருந்தேன். சிலசமயங்களில் இரவு நேரம் கூட பெயிண்டிங் வேலை செய்வேன் என்றால் சரிதான். மதுரைவீரன் சம்பவ சமயத்தில் பார்த்திபனூர் ஊராட்சியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் குடித்துவிட்டு சரியாக வேலை செய்வதில்லை என எதிரிகள் தரப்பு பகுதியில் இருந்து அடிக்கடி புகார் கொடுப்பதுண்டு என்றால் நான் கேள்விப்படவில்லை. சம்பவ சமயத்தில் பார்த்திபனூர் ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேலு என்றால் சரிதான். புகார் மனு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைத்து ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேலு ஆலோசனையின்பேரில் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து புகார் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மதுரைவீரன் எனக்கு உறவுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4, 7, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5, 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ததை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமு | Caste: | |
| Father's Name: | மலையாளம் | Calling: | கூலிவேலை |
| Village: | பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 48 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.07.2025

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் மதுரைவீரன், முனியசாமி, சாவித்திரி, சுகுணாபாரதி, மாரிமுத்து, செந்தூர்பாண்டி, பாலமுருகன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும், எனது தெருக்காரர்கள். முத்து மகன் போஸை தெரியும். கடந்த 2017 ம் வருடம் செப்டம்பர் மாதம் தேதி ஞாபகமில்லை. ஒருநாள் காலை 7.30 மணியளவில் நானும் போசுவும் உச்சிகாளியம்மன் கோவில் அருகில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார். அதற்கு சாட்சியாக என்னிடமும் போசிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என் கையெழுத்துதான். பார்வை மகசர் **அ.சா.ஆ.2.** மேலும் அதே இடத்தில்

உடைந்த இரண்டு ஓட்டு துண்டுகளை எடுத்தார். அதற்கு சாட்சியாக என்னிடமும் போசிடமும் கையெழுத்து வாங்கினார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஓடுகள்தான் டிஎஸ்பி எங்கள் முன்னிலையில் கைப்பற்றியது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3**. இதுசம்பந்தமாக பரமக்குடி டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

5,6 <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

பார்த்திபனூர் தெற்கு தெருவிற்கும் உச்சிகாளியம்மன் கோவிலுக்கும் 100 மீ தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். நான் படம் வரைந்ததில் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். ஓடுகளை எந்த இடத்தில் எடுத்தார் என்றால் உச்சிகாளியம்மன் கோவிலுக்கு முன்னே பாலகிருஷ்ணன் வீட்டு அருகே எடுத்தார். அந்த ஓடுகளை மெயின் ரோட்டில் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, மெயின்ரோட்டில்தான் எடுத்தார். சம்பவ சமயம் அந்த ரோடு மண் ரோடு. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை எப்பொழுது விசாரித்தார் என்றால் சம்பவ இடத்தை பார்வையிட்ட அன்றே விசாரித்தார். மதுரைவீரன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் , சொன்ன நேரத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், பார்வை மகசர் தயார் செய்யப்படவில்லை , பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வைமகசர், அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டேன் என்றும், சான்று பொருள்களை டிஎஸ்பி காண்பித்த புகைப்படத்தை வைத்து அடையாளம் காட்டினேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 4, 7, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5, 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ததை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)